பக்கங்கள் நான்கு

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 வைகாசி 08 ஞாயிற்றுக்கிழமை ( 21 - 05 - 2000 ) VALAMPURI ஒலி: 153

## ★ இலங்கையின் நடப்பு விவகாரங்களை

# இந்தியா உன்னிப்பாககவனிக்கிறது

# உரியநேரத்தில் தகுந்த நடவடிக்கை!

## பிரதமர் வாஜ்பாய் அறிவிப்பு

(புதுடில்லி)

இலங்கையின் வடபகுதி யாழ்ப்பாணத்தில் நிலவும் சூழ்நிலை விரைவாக மாறி வருவதால், தேவை ஏற்படின் உரிய நடவடிக்கைகளை எடுக்க இந்தியா தயாராக இருப்பதாகவும்;

இலங்கையின் நடப்பு விவகாரங்களை இந்தியா மிகவும் அவதானமாக கவனித்து வருவதாகவும்;

இந்தியப்பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் இறுக்கமாகக் கூறியுள்ளார்.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள நடப்பு விவகாரங்களை உன்னிப்பாக இந்தியா கவனித்து வருகிறது. தேவை ஏற்படும் பட்சத்தில் உரிய நடவடிக்கை எடுக்கத் தயங்காது.

இவ்வாறு இந்தியப் பிரதமர் அடல்பிஹாரிவாஜ்பாய் இந்திய மாநில முதலமைச்சர்கள்மாநாட்டில் உரையாற்றும் போது கூறினார்.

புதுடில்லியில் இடம்பெற்ற இம்மாநாட்டில் இந்தியப் பிரதமர் மேலும் கருத்து வெளியிடுகையில்;

இலங்கைக்கான மனிதாபி

(4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தைவிட்டு இராணுவம் ஒருபோதும் வெளியேற மாட்டாது

### வடபகுதித்தளபதி மேஜர் ஜெனரல் ஜானகபெரேரா

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தை விட்டு படையினர்ஒருபோதும் வெளியேறப்போவதில்லையென வடபகுதிக்குப் பொறுப்பான தளபதி மேஜர் ஜெனரல் ஜானகபெரேராதெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்: போராட்டத்திற்கு மேலதிகமாக ஆயுதங்களும், தாக்குதல் உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தை விட்டு படையினரை விரட்டுவதற்கு விடுதலைப்புலிகள் பல்வேறு

(2ஆம் பக்கம் பார்க்க]

## இடம்பெயர்ந்தவர்களினால் நிரம்பி வழியும் கல்லூரிக் கட்டடங்கள்

### - வெட்டவெளியிலும், மரநிழலிலும் தஞ்சம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் தற்போது நிலவும் பதற்ற நிலையைஅடுத்து நகர்ப்பகுதிகளிலும், அதனை அண்டிய பகுதிகளிலும் இருந்து மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு தொடர்ந்தும் வெளியேறிய வண்ணம் உள்ளனர்.

இப்படி வெளியேறும் மக்கள் வலிகாமம் மேற்கு பகுதிகளிலேயே தம் புகலிடத்தை அமைத்து வருகின்றனர்.

வலிகாமம் மேற்குப் பகுதிகளில் உள்ள பாடசாலைகள் இடம்பெயர்ந்த மக்களால் நிரம்பி வழிவதாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

[2 ஆம் பக்கம் பார்க்க]

## தனங்களப்பில் கடும் மோதல் பீரங்கித்தாக்குதல் நடத்தப்பட்டது

### - படைத்தரப்பு அறிவிப்பு!

(கொழும்பு)

தனங்களப்பு பகுதியில் அரசபடையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும்மோதல் இடம்பெற்றதாக விசேட தலைமையகம் நேற்று தெரிவித்திருந்தது.

நடுத்தரமற்றும் பாரிய பீரங்கித் தாக்குதலை விடுதலைப் புலிகள் மேற்கொண்டனர் எனவும் இத்தாக்குதலையடுத்து படையினர் பதில் தாக்குதல் நடத்தினர் என்றும் தலைமையகம் மேலும் தெரிவித்தது.

இச் சண்டையின்போது 9 படையினர் உயிரிழந்ததாகவும் இரு அதிகாரிகளும் 17 படையினரும் காயமடைந்ததாகவும் படைத்

[4ஆம் பக்கம் பார்க்க]

## கொழும்பு நகரில் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள்

(கொழும்பு)

கொழும்பு நகரில் பல தாக்குதல்களை நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளதை அடுத்து நகரின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியாவில் 120 கிலோ கிராம் வெடி பொருட்கள் கைப்பற்றப்பட்டதைத்

( 4ஆம் பக்கம் பார்க்க)

## கிளைமோர்த் தாக்குதலில் மூவர் பலி; ஐவர் காயம்

வவுனியா மூன்று முறிப்புப் பகுதியில் படையினரை ஏற்றிச் சென்ற உழவு இயந்திரம் கிளைமோர்த் தாக்குதலுக்கு இலக்கானதில் இரு அதிகாரிகள் உட்பட மூவர் பலியானதாகவும் மேலும் 5 பேர் காயமடைந்தனர் எனவும் படைத்தரப்பு நேற்றுத்தெரிவித்தது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சி மக்கள் வடமராட்சியில் தஞ்சம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி, மட்டுவில், சரசாலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இடம்பெயர்ந்து கரவெட்டி திரு இருதயக் கல்லூரி, கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, நெல்லியடி ம. ம. வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

இவர்களுக்கான உணவு

(4ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் பேச்சு நடாத்த அரசு இன்னமும் தயார்

### ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த தமது அரசு இன்னமும் தயாராக உள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளதாக அரசசார்பு கொழும்பு தமிழ் பத்திரிகை ஒன்று செய்தி

(4ஆம் பக்கம் பார்க்க)

## கைதடி வயோதிபர்கள் நிலை என்னவாயிற்று?

(யாழ்ப்பாணம்)

நேற்றும் நேற்றுமுன்தினமும் கைதடிப் பகுதியில் ஏற்பட்ட கடும் மோதல்களைத் தொடர்ந்து அப்பகுதி மக்கள் அங்கிருந்து வெளியேறிய போதிலும்.

கைதடி வயோதிபர் இல்லத்தில் தங்கியிருந்த வயோதிபர்களின் நிலையை இதுவரை அறியமுடியவில்லை.

(2 ஆம் பக்கம் பார்க்க)

## "உதயன்" பத்திரிகைக்குத் தடை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவருகின்ற 'உதயன்' பத்திரிகை வெளியீடு தகுதி வாய்ந்த அதிகாரியினால் தடை செய்யப்பட்டுள்ளதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மேற்படி

[4-ம் பக்கம் பார்க்க]

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

★ யுத்த ஆதரவு கோரி

# ஜனாதிபதி தொழிற்சங்க பிரதிநிதிகள் சந்திப்பு!

விடுதலைப்புலிகளுக்கு எதிராக தற்போது நடாத்தப்படும் போருக்கு ஆதரவு தருமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தொழிற்சங்க பிரதிநிதிகளை அழைத்துக் கேட்டுக்கொண்டார்.

அலரிமாளிகையில் இடம்பெற்ற இச்சந்திப்பிற்கு தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கு அமைச்சர் அலவிமௌலானா தலைமை தாங்கினார்.

நேற்று முன்தினம் மூன்று மணித்தியாலங்களுக்கு மேல் இடம்பெற்ற இச்சந்திப்பில் 52 தொழிற்சங்கங்களைச் சேர்ந்த 86 தொழிற்சங்கத் தலைவர்கள் கலந்துகொண்டார்கள். (வ)

## 'பிஜி'யில் இரத்தம் சிந்தாப்புரட்சி இடைக்காலப் பிரதமராக திமோதி

(புதுடில்லி)

'பிஜி' யில் ஆயுதம் ஏந்திய சிலர் நேற்று பாராளுமன்றக் கட்டடத்திற்குள் திடீரென நுழைந்து பிரதமர் மகேந்திர சௌத்திரியையும், ஏழு கபினெற் அமைச்சர்களையும் பிடித்து வைத்துள்ளனர்.

பிஜி அசோஷியேஷன் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராது திமோதி செலாக்கலுஇடைக்காலப்பிரதமராக இருப்பார் என்று ஆட்சியைக் கவிழ்த்தவர்கள் அறிவித்துள்ளனர்.

சுதேசிய பிஜி சமூகத்தினர் சார்பாக இந்த சிவில் புரட்சியை நடாத்தி அரசாங்கத்தைக் கைப்பற்றிவிட்டதாக பிஜி செய்தி இன்ரனெட் தகவல் வெளியிட்டுள்ளது.

பிடித்து வைக்கப்பட்ட பிரதமரும், அமைச்சர்களும் பாதுகாப்பாக இருப்பதாக புரட்சியாளர் குழுவின் தலைவர் ஜார் ஜஸ்பீக், பிஜி வானொலியில் கூறியுள்ளார்.

## கைது செய்யப்பட்டவர் கதிரேசன் ஆலய குரு அல்ல

(கொழும்பு)

கொழும்பில் அண்மையில் கைதுசெய்யப்பட்ட ஆலயகுரு பம்பலப்பிட்டி கதிரேசன் கோவிலைச் சேர்ந்தவர் அல்லர் என்பது தற்போது நிரூபணமாகியுள்ளது.

ஏற்கனவே கொழும்பில் வெடிபொருள்கள் கைப்பற்றப்பட்டமை தொடர்பாக கைதுசெய்யப்பட்ட 12 பேரில் ஆலய குரு ஒருவராவார் என தெரிவிக்கப்பட்டது.

பிரஸ்தாப குரு பம்பலப்பிட்டி கதிரேசன் கோவிலைச் சேர்ந்தவர் அல்ல என்றும் வேறொரு ஆலயத்தைச் சேர்ந்தவர் என்றும் தெரியவந்துள்ளது. [க. வ]

## ★ மட்டக்களப்பு குண்டுவெடிப்பில் மரணமானோருக்கு 10 ஆயிரம் ரூபா இழப்பீடு வழங்க முடிவு

(கொழும்பு)

மட்டக்களப்பில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டவர்களின் மரணச்சடங்குச் செலவுகளுக்காக பத்தாயிரம் ரூபா உடனடியாக வழங்கப்படவுள்ளது.

இக் குண்டுவெடிப்புச் சம்பவத்தின்போது கொல்லப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கு, ஒருலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாகொடுப்பனவாக வழங்கப்படும் அவர்களுக்கான ஒய்வூதியம், சம்பளம் போன்றவற்றை இறுதியாக வழங்கவும், நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் இ. மோனகுருசாமி தெரிவித்துள்ளார். [வ]

## பத்திரிகையாளருக்கு அனுமதி இல்லை

(கொழும்பு)

தற்போது வடபகுதியில் நிலவும்யுத்தச் சூழ் நிலையினால் வாராவாரம் கூட்டப்படும் பாதுகாப்புச் சபைக் கூட்டத்திற்கு பத்திரிகையாளர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சர் பட்டி வீரக்கோன் கூறியுள்ளார்.

எனினும் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை நடைபெறும் பாராளுமன்றக் குழுக் கூட்டத்திற்கு பத்திரிகையாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்று கூறியுள்ளார். (வ)

## ★ இலங். நிலைவரம் தொடர்பாக பிரெஞ்சு பாதுகாப்பு அமைச்சர் இந்தியாவுடன் பேச்சு

(கொழும்பு)

இலங்கையில் தற்போது நிலவும் நிலைவரம் தொடர்பாக பிரெஞ்சு பாதுகாப்பு அமைச்சர் இந்தியாவுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தவுள்ளார்.

இப்பேச்சுவார்த்தைக்கென அவர் இரண்டு விடயத்தை மேற்கொண்டு இந்தியாசென்றுள்ளார்.

ஆசியக்கண்டத்தின் பாதுகாப்பு நிலைமை தொடர்பாக இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் மால்லிக் பிரெஞ்சு பிரதிப் பாதுகாப்பு அமைச்சரிடம் விளக்கிக்கூறியுள்ளார்.

இந்து சமுத்திரத்தில் படை பலப் பாதுகாப்பிற்கு ஏற்பட்டுள்ள பொதுவான அச்சுறுத்தல்களையும் அவர்கள் கண்டறிந்தனர்.

பேச்சுவார்த்தைகளின் பின் பிரெஞ்சு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர்நிசச் செய்தியாளர் மகாநாட்டில் இதனைத் தெரிவித்தார். [வ]

## கூ. மொ. வி. நிலையம் சீனி விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் நேற்று பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் சீனி, அரிசி இரண்டையும் விநியோகித்தனர்.

முன்னதாக ஈழநாடு கட்டடத்தில் இருந்து பாதுகாப்பாக வின்சர் தியேட்டரில் களஞ்சியப்படுத்திய சீனியையும், அரிசியையுமே நேற்று சங்கங்களுக்கு விநியோகம் செய்தனர். (வ 12)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் காயம்

(புலோலி)

கரணவாய் மூத்தவிநாயகர் கோவிலில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் சைக்கிள் விபத்தில் கரணவாய் தெற்கைச்சேர்ந்த பொன்னுச்சாமி பால சுப்பிரமணியம் (வயது 48) காயமடைந்த நிலையில் மந்திகை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளும் சைக்கிளும் எதிர் எதிரே வந்து மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## விபத்தில் காயம்

(புலோலி)

படையினரின்வாகனமொன்றும் சைக்கிள் ஒன்றும் விபத்துக்குள்ளானதில் சைக்கிளில் சென்றவர் பலத்த காயமடைந்து பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

கரவெட்டி வடக்கைச் சேர்ந்த முருகன் செல்வராஜன் (வயது 45)என்ற கூலித் தொழிலாளியே காயமடைந்தவராவார்.

இவரும் இன்னொருவரும் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது அல்வாய் மடத்தடியில் வைத்தே இவ்விபத்து நிகழ்ந்துள்ளது.

காயமடைந்த இவரைப் படையினரே வைத்தியசாலையில் அனுமதித்தனர். (வ-52)

## கண்டெடுக்கப்பட்டது

[யாழ்ப்பாணம்]

தொம்பைப்பிள்ளை நீக்கிலஸ் (இளாலி எழுதுமட்டுவாள்) என்பவரின் தேசிய அடையாள அட்டையும் விசேட அடையாள அட்டையும் கண்டெடுக்கப்பட்டு யூ. என். எச். ஆர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அலுவலக நேரத்தில் அங்கு பெற்றுக் கொள்ளலாம். [ந]

## நிவாரணம் வழங்கப்படுகிறது

(மானிப்பாய்)

யாழ்ப்பாணம் ப.நோ.கூ. சங்கத்தின் கிளை ஒன்று ஆனைக்கோட்டை நவாலி வீதியில் (மூத்த விநாயகர் கோவிலுக்கருகில்) இயங்குவதுடன் நிவாரணம் வழங்கும் பணியில் தற்போது ஈடுபட்டுள்ளது. [ந-120]

## குரு பூசை

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை திருமுறை மன்றம் இன்று காலை 6.30 மணிக்கு நல்லூர் அருள்மிகு ஸ்ரீசட்டநாத சுவாமி தேவஸ்தானத்தில் திருஞான சம்பந்தர் குருபூசை நடைபெறவுள்ளது. திருப்பதிகங்கள்முற்றோதல், பன்னிருதிருமுறை பாராயணம் ஆகியன இடம்பெறவுள்ளது. [வ]

## இடம்பெயர்ந்தவர்..

பாடசாலைகள் தவிர வெறும் வெளிகளில் மாநிழல்களிலும், தெரு ஓரங்களில் உள்ள மர நிழல்களிலும் மக்கள் எந்தவிதமான அடிப்படை வசதிகளும் இன்றி இரவு பகலாக தங்கியிருந்து பல சிரமங்களை அனுபவித்து வருவதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்திருந்தனர்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி, மானிப்பாய் மெமோறியல் பாடசாலை, சின்மயபாரதி வித்தியாசாலை மற்றும் அப்பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் மக்கள் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இடம்பெயர்ந்து இங்கு தஞ்சம் புகுந்துள்ள மக்களுக்கு இதுவரை எந்தவிதமான அடிப்படை வசதிகளோ, உணவு வசதிகளோ எவற்றையும் எவரும் செய்து கொடுக்கவில்லை என்று அவர்கள் கவலை தெரிவித்தனர்.

யாழ். அரச அதிபரின் பணிப்பின்பேரில் இவர்களது விவரங்கள் அந்தப்பகுதி கிராமசேவையாளர்களினால் இப்போது திரட்டப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. [வ]

## கைதடி...

அப்பகுதிகளிலும் ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததாகவும் செய்திகள வெளிவந்துள்ளதாகவும்.

இந் நிலையில் அவர்களை பாதுகாப்பாக மீட்டெடுப்பதற்கு யாழ்ப்பாணத்தில் இயங்கும் சர்வதேச அமைப்புகள்முன்வரவேண்டும் எனப் பலரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## யாழ்ப்பாணத்தை....

யுக்திகளைக் கையாண்டு வருகின்றனர் என்றும் தெரிவித்துள்ளார்.

இதே வேளையில் யாழ்ப்பாணத்தில்கடமை புரியும்படையினர் தாம் ஒருபோதும் விடுதலைப்புலிகளிடம் சரணடையப் போவதில்லையெனவும் உறுதியுடன் தொடர்ந்து போராடப்போவதாகவும் தெரிவித்துள்ளதாகப் படைவட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

விடுதலைப்புலிகள் இராணுவத்தினரை சரணடையக் கோருவதானது மனோவியல் ரீதியான ஒரு தந்திரோபாயம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-வ)


## தவறிவிட்டது

நிதராமவீரலிங்கம் மோகனரூபி என்பவரது அடையாள அட்டைகள் யாழ். பல்கலைக் கழகத்திற்கும் நாவலர் வீதிக்கும் இடையில் கடந்த மூன்று தினங்களுக்கு முன்பு தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யாழ். பல்கலைக்கழகத்தில் ஒப்படைக்கவும்.

தேசிய அடையாள அட்டை இல;796234377V
பல்கலைக்கழக அடையாள அட்டை இல: DG/U,68
இவற்றுடன் விசேட அடையாள அட்டையும் கொலைந்து விட்டது. [கி324]

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியில் பணியாற்றி வரும் அருட் தந்தை ஜீவனதாஸ் பெர்னாண்டோ அடிகளாருடைய அன்புத் தந்தையாரின் மறைவையிட்டு பத்திரிசியார் குடும்பம் அருட் தந்தையாருக்கும், அவருடைய தாய் சகோதரர்க்கும் ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கின்றது.

''நித்திய இளைப்பாற்றியை அவருக்கு அளித்தருளும்''

அதிபர், ஆசிரியர்கள்
மாணவர்கள்
புனித பத்திரிசியார் கல்லூரி
யாழ்ப்பாணம்.

[கி323]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
சரஸ்வதிஅம்மா பொன்னுத்துரை

பூவுலகில்: 1934-10-28
பொன்னுலகில்: 2000 04-22

இருவேழும் இல்வாழ்வில் இணைந்த நாள் முதலாய்
ஒரு கூட்டிற் பறவையென உலகறிய வாழ்ந் தோம் என்
அருகிருந்து அமைதியுடன் ஆருயிர் நீத் தாய் தில்லைப்
பெருமானின் பத நிழற் கீழ் பேரின்பம் பெறுவாயே

''கம்பலை வளவு''
பன்னாலை,
தெல்லிப்பழை.

பிரிவால் துயருறும்
ந. பொன்னுத்துரை
(கணவன்)
சகோதரர்கள், மருமக்கள்.

[கி322]

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.
- குறள்

வலம்புரி

## அகதிவாழ்வும் பாதுகாப்பும்

வாழ்வியலில் துன்பம் என்பது பேரிடியே. நாம் அனுபவிக்கும் துன்பம் எல்லைகடந்ததொன்று. பாரிய இடப்பெயர்வின் துன்பத்தை அம்மக்கள் ஏக்கச் சுமையோடு தாங்க முடியாது தத்தளிக்கின்றார்கள் முதியோர், பாலர் பச்சிளம் குழந்தைகள் இவ் இடப்பெயர்வால் பாதிக்கப்படுகிறார்கள்.

தாய்மையின் ஏக்கம் சொல்லித் தெரிவதில்லை அன்னாரின் அன்பின் ஆழம் அளவிடமுடியாது. இந்நிலையில் தான்பெற்ற பிள்ளைகள் படும் துன்பத்தை தாங்க முடியாது தவிக்கும் கண்ணீர் கரை புரண்டோடுகிறது. வாழ்வினில் அசௌகரியங்களை தாங்கிக்கொள்ள முடியாத ஏக்கம் அலைக்க அல்லல்படுகிறார்கள்.

சுற்றத்தை சுமைப்படுத்தும் நிலை ஒருபுறம், பொருள்கள் அற்ற நிலையில் பொருமிக் கொண்டிருக்கும் மக்கள் ஏராளம் என்றுதான் எங்கள் வாழ்வில் அமைதியின் ஒளிக்கீற்று தென்படும் என்று ஏங்குகிறார்கள். இடத்துக்கிடம் பூனைகுட்டியதுகாவியது போல் சட்டி பெட்டிகளுடன் சலனப்படும் மக்கள் கூட்டத்தை பார்க்க பரிதாபகரமாக இருக்கிறது. இந்த அகதி நிலைக்குத் தள்ளப்பட்ட மக்களை தாங்கிக்கொள்வது பொது அமைப்புக்களினதும் ஈரமுள்ள நெஞ்சங்களினதும் தலையாய கடனாகும். அரச நிறுவனங்கள் துலாக் கோல் போல நீதிவழிநின்று தேவைக்குதவ வேண்டும்.

''உடுக்கை இழந்தவன் கைபோல இடுக்கண் களைய வேண்டும்'' பிரதேச செயலர்கள், கிராம சேவகர்கள், பொதுத் தொண்டு நிறுவனங்கள் என்பவை இணைந்து இன்னல் போக்க உதவவேண்டும். வாழ்விடம்காணல், நேரக்கஞ்சிகாணல், தேவைகளை ப்பூர்த்தி செய்ய வழிவகை தேடல் இன்னோரன்ன செயற்பாடுகளை முனைந்து செய்ய வேண்டும்.

உயிர்ப்பாதுகாப்புக்களை உலகமெல்லாம் ஓதும் நிலையில் உள்ள மண்ணின் மக்களை மன நோயாளர்களாக்க கூடாது. அணைக்கும் கரங்கள் ஆறுதல் தர வேண்டும். மாணம் பெரி தாய் உயிர் வாழ்ந்த மக்கள் கூட்டம் அனிச்சம் போன்றவர்கள் அவர்களது உளம் தளாது அணைத்துக் கொள்வது அவசியமாகும்.

- அன்புடன் ஆசிரியர்

## இளவாலைப் பகுதியில் ஷெல்

(யாழ்ப்பாணம்)

இளவாலைப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் பரவலாக செல்கள் வீழ்ந்து வெடித்தன

முள்ளானைப் பகுதி உள்ளிட்ட ஒரு சில இடங்களில் இச்ஷெல்கள் வீழ்ந்து வெடித்தனவாயினும் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

இச்சம்பவத்தை அடுத்த இப்பகுதியில் பலத்த பதற்றம் நிலவியது. [க-12]

# அரசும் புலிகளும் யுத்தத்தைநிறுத்தி பேசுவதற்கு முன்வர வேண்டும்

இலங்கையின் வடபகுதியில் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள அரசுப்படைகளும் விடுதலைப் புலிகளும் யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தைகளை உடன் ஆரம்பிக்குமாறு சர்வதேச சமூகம் இரு தரப்பினரையும் கேட்டுள்ளது.

இது தொடர்பான விரிவான பேச்சுவார்த்தை ஒன்று இந்திய வெளியுறவுச் செயலர் லலித்மான்சிங்கிற்கும் போத்துக்கலின் இந்தியத் தூதுவர்யோபோகைக்கிளோவிற்கும் இடையில் அண்மையில் புது டில்லியில் இடம்பெற்றதாக 'இந்து' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பான விரிவான அறிக்கை போர்த்துக்கல் வெளியிடப்பட்டதாகவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிற்கு போர்த்துக்கல் தலைமை தாங்குவதும் இங்கு குறிப்பிடத்தக்கது,

இலங்கை விவகாரத்தில் பல நாடுகள் சம்பந்தப்பட்டிருப்பதால் பிரச்சினையை தீர்ப்பது மிகவும் சிக்கலிற்குரிய ஒரு விடயம் எனவும் இந்து பத்திரிகை அண்மையில் செய்தி வெளியிட்டுள்ளது. (க-வ)

★ ஒய்வூதியம் பெறுவோர்

## நம்பிக்கை நிதியம் நிறுவ அமைச்சு செயலர் உறுதி

[கொழும்பு]

அரசாங்க ஓய்வூதியம் பெறுவோரின் நன்மை கருதி ஓய்வூதியக்காரரின் நம்பிக்கை நிதியம் ஒன்று விரைவில் நிறுவப்படவுள்ளதாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலர் மகிந்த பந்து. சேன தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; எதிர்வரும் ஜூலை மாதம் முதல் இந் நம்பிக்கை நிதியம் செயற்படும்.

நாடு முழுவதிலும் உள்ள 4 லட்சம் பேர் இந் நிதியத்தின் மூலம் நன்மை பெறுவர்.

இந் நிதியத்தின் மூலம் சேரும் பணத்தைப் பயன்படுத்தி ஓய்வூதியக்காரரின் வைத்தியப்பராமரிப்புஉட்பட இதர செலவுகளைச்சமாளிக்க முடியும் என்றும் வீடுகட்டுதல் போன்ற செயல் திட்டங்களை மேற்கொள்ளுவதற்கும் நிதியத்தின் மூலம் பணம் வழங்கப்படுமென்றும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

தினசரி 10 ரூபா வீதம் அறவிடப்படும். இந் நிதியின் மூலம் வருடாந்தம் சுமார் 4 கோடியே 9 லட்சம் ரூபா வரையில் திரட்ட முடியும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (க-வ)

## 45வயதில் தந்தையாகும் பிரிட்டிஷ் பிரதமர்

(இலண்டன்)

பிரிட்டிஷ் பிரதமர் டொனி பிளேயர் தம்பதியினருக்கு நேற்று ஆண் குழந்தை ஒன்று பிறந்துள்ளது.

தாயும், சேயும் பூரண ஆரோக்கியத்துடன் இருப்பதாக இலண்டன் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பிரிட்டனில் பதவியிலிருக்கும் பிரதமர் ஒருவரின் குடும்பத்தில் 165வருடங்களுக்கு பின்னர் பிறந்த முதல் குழந்தை இதுவென பிரிட்டிஷ் அரச குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். (க-வ)

## வளர்த்த மாடு கொம்பால் குத்தியதில் ஒருவர் பலத்த காயம

வளர்த்தமாடு கோபங்கொண்டு கொம்பால் குத்தியதால் காயமடைந்தவர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை கோணந்தீவைச் சேர்ந்த சின்னத்தம்பி சின்னராசா [வயது 53] என்பவரே காயமடைந்தவராவார்.

இவர் வளர்த்து வந்த மாட்டிற்குப் போதிய தீன் வைக்கப்படாமையால் கோபங்கொண்ட வளர்ப்பு மாடு அவரைக்கொம்பால் குத்திப் பலத்த காயப்படுத்தியுள்ளது (ந-52)

## மட்டக்களப்பு குண்டுவெடிப்பில் சிறுவர்களே கொல்லப்பட்டனர்

மட்டக்களப்பு மங்களாராம விகாரைக்கு முன்பாக கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற குண்டுத் தாக்குதலின் போது கொல்லப்பட்டோரில் பெரும்பாலானோர் சிறுவர்கள் என தற்போது தெரியவந்துள்ளது.

இவர்கள் அனைவரும் ஆயத்திய மலைச் சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த ஆறு, ஏழு எட்டு வயதுகளைக்கொண்டவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (க-வ)

இலங்கை விவகாரம் தொடர்பாக

## தமிழக பாரதீய ஜனதாக் கட்சி விரைவில் முக்கிய முடிவை எடுக்கும்

### கட்சித் தலைவர் அறிவிப்பு

(சென்னை)

இலங்கை விவகாரத்தில் தமிழக பாரதிய ஜனதாக் கட்சியின் நிலைப்பாடுகுறித்து ஆராயுமுகமாகவிரைவில் முக்கிய கூட்டம் ஒன்று கூட்டப்படவுள்ளதாக அக்கட்சியின் தமிழக. தலைவர் கிருபாநிதி தெரிவித்துள்ளார்.

இக் கூட்டத்தில் இலங்கை விவகாரம் தொடர்பான முக்கிய முடிவுகள் மேற்கொளளப்படவுள்ளதால் அக் கட்சியின் அகில இந்திய தலைவர் உஷாநந்தாக்கரே கலந்து கொள்ள இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-வ)

## யாழில்பாணுக்குத்தட்டுப்பாடு 300கிராம் பாண் 8.50 சதம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் உள்ள பேக்கரிகளுக்குமாவிநியோகம் செய்யப்படாமையால் பேக்கரிகளில் போதியளவு பாண் போடப்படாமையால் பாணுக்குபலத்த தட்டுப்பாடு நிலவுதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாண் விற்பனை செய்யும் விற்பனை நிலையங்கள் மக்கள் பெருமளவில் பாணுக்காக காத்து நின்று ஏமாற்றத்துடன் செல்வதை கடந்த சில தினங்களாக அவதானிக்க முடிந்தது.

இதேவேளை பாணை உற்பத்தி செய்யும் சிலபேக்கரிகள் பாணின் நிறையை வெகுவாகக் குறைத்து (300 கிறாம் எடையில்) எட்டு ரூபா ஐம்பது பது சதத்திற்கு விற்பனை செய்து வருவதையும் அவதானிக்க முடிகிறது.

யுக்தசூழ்நிலையில்அல்லோலகல்லோலப்பட்டிருக்கும் இவ்வேளையில் நிறைகுறைத்தும் லாபம் சம்பாதிக்கும் இவர்கள் மீது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கமாட்டார்களா? என மக்கள் கேட்டுக்கொள்கிறார்கள். [வ]

★ இலங்கைப் பிரச்சினையில்

## இந்தியாவை எவரும் கட்டாயப்படுத்தமுடியாது

### ஜோர்ஜ் பெர்னாண்டஸ்

(புதுடில்லி)

இலங்கைப் பிரச்சினையை தீர்த்து வைப்பதில் இந்தியாவை எவரும் கட்டாயப் படுத்த முடியாது என்று பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தெளிவாகக் கூறியுள்ளார்.

புதுடில்லியில் நேற்று தெற்காசிய மனிதவளமேம்பாட்டு மாநாட்டில் பேசிய பின் செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே இலங்கைப் பிரச்சினையில் இந்தியா இராணுவ ரீதியாகத் தலையிடுவது என்ற பேச்சுக்கே இடமில்லை என்று கூறினார்.

இம் மாநாட்டில் முன்னாள் பிரதமர் ஐ. கே. குஜ்ரால் சார்க் அமைப்பின் தலைமைச் செயலர். நிகால் றொட்கோவெளி நாட்டுத் தூதுவர்கள் பாகிஸ்தானிய மனித நேய அமைப்பின் தலைவர் கதிஜாகக் உட்பட பலர் கலந்து கொண்டனர். (வ்)

## முப்படைகளின் குடும்பங்களுக்கு சமுர்த்திஉதவி வழங்கத்திட்டம்

முப்படைகளினதும் பொலிசாரினதும் குடும்பங்களுக்கும் சமுர்த்திஉதவி வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என அமைச்சர் எஸ். பி. திசநாயக்கா தெரிவித்துள்ளார்.

கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் மகிந்தராஜபக்ஷா அமைச்சர் திசநாயக்காவிடம் விடுத்த வேண்டுகோளை அடுத்தே இந் நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

# இலங்கையின்வடபகுதியில்தொடரும் யுத்தத்தால் அமெரிக்கா கவலை

(வாஷிங்டன்)

இலங்கையின் வடபகுதியில் தொடரும் அகோர யுத்தத்தில் யாழ்ப்பாண மக்கள் பாதிக்கப்பட்டது குறித்து அமெரிக்க மனித உரிமைகள் அமைப்பு ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அவ் அமைப்பு வெளியிட்ட அறிக்கையில்: யாழ்ப்பாண மக்கள் சுமுகமாக வாழக் கூடிய ஒரு சூழ் நிலையை இலங்கை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும்.

அரச கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களிற்கு தேவையான மருந்து வகைகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை தாமதியாது அனுப்பிவைக்க வேண்டும் என்றும் அவ் அமைப்புமேலும் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் நிலவும் போர் நிலைமைகள் குறித்து ஜப்பான் நாடு தனது அதிர்ச்சியையும் கவலையையும் தெரிவித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-12)

# சாவகச்சேரியில் 'ஷெல் தாக்குதல்'

# நால்வர் பலி பதின்மூன்றுபேர் காயம்

(புலோலி)

சாவகச்சேரிப் பகுதியில் நேற்று நூற்றுக்கணக்கான ஷெல்கள் பரவலாக வீழ்ந்து வெடித்ததில் அப்பகுதிஎங்கும் அல்லோலகல்லோலப்பட்டது. அம்மன் கோவிலை அண்டிய பகுதியில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் நான்கு பேர் அந்த இடத்திலேயே உயிரிழந்ததாக அங்கிருந்து வெளியேறி வடமராட்சியில் தங்கியுள்ளவர்கள் தெரிவித்தனர்.

ஷெல் வீச்சில் பலியானவர்களில் சாவகச்சேரி குகன் ஸ்ருடியோ உரிமையாளர் அரியகுட்டி வடிவேலு (வயது 75) என்பவரும் ஒருவர் எனவும் ஏனைய மூவரும் இனங்காணப்படவில்லை எனவும் இந் நால்வரின் உடல்களும் அந்தந்த இடங்களிலேயே கிடப்பதாகவும் தெரியவருகின்றது.

இது தவிர இப் பகுதியில் பரவலாக வீழ்ந்து வெடித்த ஷெல்களினால் பலர் காயமுற்று மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களின் பெயர் விபரம் வருமாறு: வடிவேலுபிரகாஷ் (வயது 32), மாணிக்கம் கிருஷ்ணன் (வயது 28), எஸ். வரதன் (வயது 17), பொன்னையா பொன்னம்பலம் [வயது 33], சச்சிதானந்தம் வசந்த சர்மா [வயது 37], குமாரசாமி கலைவரதன் [வயது 13], கணபதிப்பிள்ளை உபேந்திரன் [வயது 39], உபேந்திரன் கேதீசன் [வயது 6], [இவர்கள் அனைவரும் சாவகச்சேரி சிவன்கோவிலடியைச் சேர்ந்தவர்கள்.];

இராஜரட்ணம் சிவரூபி [வயது 21], எஸ். நவரெட்ணம் (வயது 45), வேலன் சண்முகம் [வயது 80], தம்பிப்பிள்ளை கந்தசாமி [வயது 51) [இவர்கள் அனைவரும் மட்டுவில் தெற்கைச் சேர்ந்தவர்கள்.]

யோகராஜா சதிஸ்கர [வயது 14] நுணாவில் மேற்கு இவர்கள் தவிர வேறு பலரும் சிறு காயங்களுக்கு ஆளானதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன. (ந-52)

## ★ யாழ். அரச அதிபரின் கோரிக்கையை நிறைவேற்றுவதில் கூ. சங்கங்கள் பெரும் சிரமம்

(யாழ்ப்பாணம்)

இரண்டு மாதங்களுக்குப் போதுமான உணவுப் பொருட்கள் (அரிசி, மா, சீனி) பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இருப்பில் வைத்திருக்க வேண்டும் என்று அரச அதிபர் கேட்டுள்ளார்.

இதனை அடுத்து இப் பொருட்களைக் களஞ்சியங்களில் இருந்து எடுத்துவருவதில் பல சிரமங்களை சங்கங்கள் எதிர்நோக்க வேண்டியிருப்பதாக சங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

போதிய லொறிகள் இல்லாத சங்கங்கள் பெருந்தொகையான கூலியைக்கொடுத்து இவற்றை ஏற்றுவதற்குரிய இலாபம் இப்பொருட்களில் கிடைக்காது என்றும், சேவை நோக்கில் செயற்படும்போதே பாரிய நட்டத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

போதிய இடவசதிகள் இல்லாத சங்கங்கள் இரண்டு மாதங்களுக்குரிய உணவுப் பொருட்களை களஞ்சியப்படுத்துவதால் சிரமங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

### தனங்களப்பு...

தரப்பு தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் 17 சடலங்கள் மீட்கப்பட்டதாகவும் படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

இதேவேளை தனங்களப்பு பகுதிக்கு கூடுதலான படையினர் அனுப்பப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

### இந்தியா...

மான உதவிகளைப் பொறுத்தவரையில் இந்தியா அதனை செய்ய எப்போதும் தயாராக உள்ளது என்பதை இலங்கை அரசிடம் எப்போதோ கூறிவிட்டோம்.

இலங்கைப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியாவின் இராணுவத்தலையீடு இருக்கும் என்ற கூற்றை முற்றாக நிராகரித்த பிரதமர் வாஜ்பாய் அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் கேட்டுக்கொள்ளுமிடத்து சமாதானஉடன்பாடு ஒன்றை ஏற்படுத்துவதில் சமரசம் செய்யவும் தாம் தயாராக இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். [வ]

## மரண அறிவித்தல்கள்

### திரு செல்வம் பெர்னாண்டோ

புனித பத்திரிசியார் கல்லூரியில் பணிபுரியும் அருட் தந்தை ஜீவனதாஸ் (அ.ம.தி) அவர்களின் தந்தையார் திரு செல்வம் பெர்னாண்டோ அண்மையில் காலமானார். அன்னாரின் மரணச்சடங்கு 21-05-2000 இன்று பேசாலையில் இடம்பெறும்.

அதிபர்
புனித பத்திரிசியார்
கல்லூரி
யாழ்ப்பாணம்

[கி-326]

### சுப்பிரமணியம் சரவணபவானந்தன்

கைதடி மேற்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் சரஸ்வதியின் அன்புப் புதல்வன் சரவணபவானந்தன் 17-05-2000 அன்று அகாலமரணமானார். இவர் சுப்பிரமணியம் நாகேந்திரன், சுப்பிரமணியம் ரவீந்திரன் (இலண்டன்), சுப்பிரமணியம் கஜமுகன் ஆகியோரது சகோதரருமாவார். அன்னாரது பூதவுடல் கைதடியில் தகனம் செய்யப்பட்டு இறுதிச்சடங்கை அவரது தாயார் நிறைவு செய்துள்ளார். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
திருமதி சுப்பிரமணியம் சரஸ்வதி
(தாயார்)

(கி-325)

## ஊரடங்கு அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் மாத்திரம் மறு அறிவித்தல் வரை இருபத்திநாலு மணி நேரமும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும்.

யாழ். பிரதேச செயலர் பிரிவு தவிர்ந்த யாழ் குடா நாட்டின் தீவுப்பகுதி உட்பட ஏனைய பகுதிகளில் இன்று அதிகாலை 5மணிக்குஊரடங்கு தளர்த்தப்பட்டுமீண்டும் இன்று இரவு ஏழு மணிக்கு அமுல் படுத்தப்படும் என்று யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத்தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது. [வ]

## போலி பிறப்பு சான்றிதழ் வழங்கியமை தொடர்பாக தமிழ் வர்த்தகர் கைது

(கொழும்பு)

போலி பிறப்புச் சான்றிதழ் வழங்கியமை தொடர்பாக பிரபல தமிழ் வர்த்தகர் ஒருவர் அவர். பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெலிமடையைச் சேர்ந்த இவர் 150இற்கும் மேற்பட்ட போலிபிறப்புசான்றிதழ்களை இவர் வழங்கினார் எனவும் பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் வர்த்தகர்கள் உட்பட இச்சம்பவத்துடன் மேலும் இருவரும் இம் மாதம் 31 ஆம் திகதிவரை நீதிமன்றக் காவலில் வைக்கப்பட வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளார். (வ)

## ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக தமிழகத்தில் ஆர்ப்பாட்டப் பேரணி

[சென்னை]

ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக நேற்று தமிழகத்தில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் ஆரம்பமான இப் பேரணியில் மூவாயிரத்திற்கும் அதிகமான மக்கள் பங்கு கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழகத்தில் உள்ள இலங்கைத் தூதரகம் முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றும் இடம் பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தமிழக கட்சியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இப்பேரணியின் முடிவில் மனிதாபிமானம் என்ற பெயரில் இந்திய அரசாங்கம் எவ்வித உதவியையும் இலங்கைக்கு செய்யக் கூடாதென அக்கட்சியின் தலைவர் டாக்டர் சுப்பிரமணியசுவாமி தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-வ)

### இளைமோர்...

நேற்று முன்தினம் அதிகாலை 7 மணியளவில் இத் தாக்குதல் நடத்தப்பட்டதாக படைத்தரப்பு மேலும் தெரிவித்துள்ளது. (க-வ)

### புலிகளுடன்...

வெளியிட்டுள்ளது.

அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கையில், எக்காரணம் கொண்டும் யாழ்ப்பாணத்திலிருந்து படையினர் வாபஸ் பெறப்படமாட்டார்கள் என்று ஜனாதிபதி அழுத்தம், திருத்தமாகத் தெரிவித்துள்ளதாகவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (க)

### தென்மராட்சி...

வசதிகளை அப்பகுதி மக்களும், பொது அமைப்புகளும் வழங்கிவருவதாகவும், அரசசார்பற்ற அமைப்புகள் இம் மக்களைச் சென்று பார்வையிட்டு அவர்களின் விபரங்களைச் சேகரித்ததாகவும் தெரியவருகிறது. (ந)

### கொழும்பு..,

தொடர்ந்து குற்றத்தடுப்புப் பணியகத்தினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

குற்றத்தடுப்புப் பணிப்பாளரான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பந்துல விக்கிரம சிங்கா தகவல் தருகையில் பல்வேறு தீவிர வாதிகளும் அவர்களுக்கு உதவிபுரிபவர்களும் விசாரணையின் பொருட்டு ஏற்கனவே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளார்: [வ]

## இலங்கை பிரதிவெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல இந்தியாபயணம்

(கொழும்பு)

இலங்கையின் பிரதி வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல திடீர் விஜயம் மொன்றை மேற் கொண்டு இந்தியா பயணமானர்.

படை உயரதிகாரிகள் அமைச்சர்கள் தற்போது இந்தியாவிற்கு விஜயம் செய்ததையடுத்து அமைந்துள்ள இவரது விஜயம் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாக கருதப்படுவதாக அரசியல் வல்லுநர்கள் அபிப்பிராயம் வெளியிட்டுள்ளனர்:

ஆனால் தான் தனிப்பட்ட விஜயம் மேற்கொண்டு இந்தியாவிஜயம் செய்வதாகஇவர் கூறினாலும் கூட இவரது விஜயம் முக்கியத் துவம் வாய்ந்த ஒன்றாக கருதப்படுகிறது. [வ-த]

## மூன்று இந்திய மீனவர்களும் காங்கேசன் பொலிசாரிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம் சிறைச்சலையில் இருந்த மூன்று இந்திய மீனவர்கள் காங்கேசன்துறைப் பொலிசாரிடம் ஒரு சில வாரங்களுக்கு முன்னர் ஒப்படைக்கப்பட்டனர்.

பருத்தித்துறை நீதவான் எஸ்.ஏ.ஈ, ஏகநாதனின் உத்தரவாதத்திற்கிணங்கவே மேற்படி மூன்று மீனவர்களும் காங்கேசன் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

ஆர். சேகர்' எஸ்.ரவி, எஸ்; ராஜா ஆகியோரே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டவர்களாவர். (க-12)

## யாழின் தற்போதைய நிலையில் இந்திய பங்களிப்புநிச்சயம் உண்டு

### பி-பி.சி: அறிவிப்பு

(புதுடில்லி)

யாழ்ப்பாணத்தின் தற்போதைய நெருக்கடியான நிலையில் யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தல் அல்லது பொதுமக்களை யுத்த களத்திலிருந்து அப்புறப்படுத்தல் என்ற விடயங்களில் இந்தியாவின் பங்களிப்பு நிச்சயம் இருந்தே தீரும் என நேற்றைய பி.பி.சி. விமர்சனத்தில் தெரிவிக்கப்பட்டது.

அவ் விமர்சனத்தில் மேலும் தெரிவிக்கையில்: மனிதாபிமான அடிப்படையில் இந்தியாவின் பங்களிப்பு இலங்கைக்கு இருக்கும் என்றும் ஆனால் அது எந்தவடிவில் இருக்கும் என்பது பற்றிஉறுதி கூறமுடியாது என்றும் தெரிவித்துள்ளது.

இதே வேளையில் இந்திய அரசாங்கம் இலங்கை விவகாரம் தொடர்பாக ஆராயுமுகமாக அமெரிக்காவிடமும் இஸ்ரேல் அரசிடமும் தொடர்பு கொண்டுவருவதாகவும் மேலும் அறியப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் அரச படைகளுக்கு உதவியாக இஸ்ரேலியப்படைகள் கொண்டு வரப்படக் கூடும் என்ற ஊகங்கள்நிலவுவதாகவும் பி.பி.சி. விமர்சனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-வ

### உதயன்...

தகவல் நிலையம் மேலும் தெரிவிக்கையில், தேசியபாதுகாப்பு, பொது அமைதியைப் பேணல் ஆகியவற்றிற்கு பாதகமான, முறையிலும் குழப்பங்களை விளைவிக்கும் வகையிலும் செய்திகள் வெளியிட்டமை தொடர்பாகவே இத் தடை விதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-வ)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அச்சு கோ ஸ்தாபனத்தாருக்காக இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000ஆம் ஆண்டு மேமாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.